

பாதுகாப்பான சூழலில்
ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல்
24 மணி நேர சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
ஆர். ஜி. கட்டடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்.

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

மலர் 1 யாழ்ப்பாணம் அக்ஷய [illegible] வைகாசி மீ 1 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 றம்ழான் பிறை 5 (15-05 1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY இதழ் 152

ரெலெக்ஸ்
ரெலிபோன்
சேவையில்
நம்பிக்கையானவர்கள்
நல்லவர்கள் — வல்லவர்கள்
ரெலிகுளோப்!
ஆர். ஜி. கட்டடம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்.

கொழும்பில் குண்டுவெடிப்பு பயமுறுத்தல்

பாதுகாப்பு அதிகாரிகளுக்கு துண்டுப் பிரசுரங்கள்

கொழும்பு, மே 15

கொழும்பின் பிரதான இடங்கள், அலுவலகங்களில் மேலும் பல குண்டுகள் வெடிக்க வைக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

இது சம்பந்தமான எச்சரிக்கைத் துண்டுப் பிரசுரங்கள் பாதுகாப்பு வட்டாரங்களைச் சேர்ந்த பல அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது

கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் வெடித்த குண்டுச் சம்பவம் போன்று பல இடங்களில் நடைபெறும் என்று அத்துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் துண்டுப்பிரசுரங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தனிப் பிரிவு

இதே வேளை — குண்டுச், குண்டுப் பார்சல்கள் பற்றிய தகவல்கள், தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு தனியான பிரிவு ஒன்று கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

24 மணித்தியாலமும் இப்பிரிவு இயங்கும்.

எங்கேயாவது குண்டுப் பார்சல்கள், அனுமதேயப் பார்சல்கள் இருப்பதாகத் தகவல் கிடைத்தவுடன், இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் அந்த இடத்துக்கு விரைந்து சென்று செயற்படுவர்

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்லுவினம் எங்கே.. அதுபோல ஈழம் என்ட சொல்லு தென்னிலங்கைக்காரரை கதி கலங்க வைக்குதோ பிள்ளை..!

28 தமிழர் இடமாற்றம்

கொழும்பு, மே 15

மத்திய தந்திக் கந்தோரில் கடமையாற்றியவர்களில் 28 தமிழர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு கருதியே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர் என்று நம்பப்படுகிறது.

சுற்றிவளைப்பு தேடுதல்களை நிறுத்த முடியாது

மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி மெண்டிஸ் தகவல்

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு மே 15

சுற்றிவளைப்பு, தேடுதல்கள் ஆகியவற்றை நிறுத்த முடியாது. அவை தவிர்க்கமுடியாதவை. தகவல்கள் கிடைத்தே நாம் அவற்றை நடத்துகிறோம்

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி [illegible] ரனல்ட் மெண்டிஸ் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் திரு எம். அந்தோனிமுத்து இணைப்பதிகாரியுடன் நேற்றுத் தொடர்பு கொண்டார்.

படையினர் நடத்தும் தேடுதல்களினால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். தமது தொழிலைச் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதனால் ஜீவனோபாயத்துக்குக் கஷ்டப்படுகிறார்கள். விவசாயமும் பாதிக்கப்படுகிறது. எனவே விவசாயிகளைக் கைது செய்வதையும், அவர்கள் பாதிக்கப்படுவதையும் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் — இவ்வாறு அரச அதிபர் இணைப்பு அதிகாரியிடம் கேட்டார்

அதற்கு அவர் பதிலளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார் என அறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொலீஸார் கலைத்தனர்

கொழும்பு, மே 15

கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்கள் தொடர்பான தானம் வழங்கும் வைபவம் ஒன்று, பிரித் ஓதும் வைபவம் ஒன்றும் நேற்று சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் பொலீஸார் அங்கு விரைந்து வந்து அங்கு நின்றவர்களைக் கலைத்தனர்.

மூவர் கைது

மட்டக்களப்பு மே 15

இரண்டு தொண்டர் ஆசிரியர்கள் உட்பட மூவர் நேற்றுச் செங்கலடியில் வைத்து ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

"எல்லாம்" ஈழமாக மாறிய விந்தை!

இளம் பெண் விசாரணையில்

யாழ்ப்பாணம், மே 15

'எல்லாம் இன்பம்' 'ஈழம் இன்பம்' ஆக மாறி, இளம் தமிழ்ப் பெண்ணொருத்திக்குத் துன்பம் கொடுத்துள்ளது

கொழும்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரும் கலாசாலை விடுதியில் தங்கிப் பயிற்சி பெற்று வந்தார்.

விடுதி மேற்பார்வையாளர் ஒரு சிங்களப் பெண். ஒருநாள் விடுதியைச் சுற்றிப் பார்வை இட்டுக் கொண்டு வந்தார்.

அப்போது தமிழ்ப் பெண்ணின் படுக்கையில் இருந்த தலையணை உறை மேற்பார்வையாளர் கண்ணில் பட்டுவிட்டது.

அந்த உறை மீது ஆங்கிலத்தில் ELLAM-INBAM என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன

இதை வாசித்த சிங்கள மேற்பார்வையாளர் எல்லாம் இன்பம் என்ற சொற்றொடரை 'ஈழம்-இன்பம்' என்று எடுத்துக் கொண்டு விட்டார்.

விஷயம் கலாசாலை உயர் அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

உயர் அதிகாரியோ மேலிடத்துக்கு அறிவித்தார்.

இப்போது சம்பந்தப்பட்ட இளம் பெண் விசேட புலனாய்வு பொலீஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்

மகளுக்கு ஏற்பட்ட நிலையைக் கேள்விப்பட்டு பெற்றோர் கொழும்பு விரைந்துள்ளனர்

'எல்லாம் இன்பம்' 'எல்லாம்- துன்பம்' ஆகிவிட்டது

அநுராதபுரத்தில் யாழ் பஸ் தடுத்துவைப்பு

பயணிகள் வேறு பஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்

நல்லூர், மே 15

வடக்கு நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்று அநுராதபுரத்தில் சிறு படையினரால் மறித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்ஸில் யாழ் ஆஸ்பத்திரிக்கு மருந்துகளும் தனியார் [illegible] ஒன்றுக்கு இயந்திரங்களும் வந்திருந்தன என்று தெரியவருகிறது

நேற்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இந்த பஸ் அநுராதபுரத்தில் ஆயுதப் படையினரால் மறித்து சோதனையிடப்பட்டது.

சோதனையின் போது பஸ்ஸில் துண்டுப் பிரசுரம் அடங்கிய பார்சல் ஒன்று இருக்கக் காணப்பட்டதாம்.

பார்சல் பற்றி பயணிகளிடம் விசாரித்த போது எவரும் பார்சலுக்கு உரிமை கோரவில்லை.

எனவே சோதனையின் பின்னர் சாரதியான எம். பரஞ்சோதி என்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

லொறிகளும் தடுத்துவைப்பு

நல்லூர், மே 15

யாழ்ப்பாணம் நோக்கி மரங்களுடன் வந்து கொண்டிருந்த பல லொறிகள் வவுனியாவில் ஆயுதப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இதன் சாரதிகளும் நடத்துநர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று காட்டுமரங்களை ஏற்றிக் கொண்டு பல லொறிகள் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தன. இவைகளை வவுனியாவில் உள்ள ஆயுதப்படையினர் மறித்து தீவிர சோதனைக்குட்படுத்தினர்.

அப்பொழுது பலர் அனுமதி இன்றி மரம் குடாநாட்டினுள் மரங்கள் கொண்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து சகல லொறிகளும் வவுனியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

15-05-1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.23 முதல் 8.53 வரை
ராகு காலம்:
1.23 முதல் 2 53 வரை
இவை [illegible] இரவுக்கும் பொருந்தும்
ஷஷ்டி விரதம்

நோன்பு நேரம்
சஹர் முடிவு:- 4.19
இப்தார்:- 6.20

தமிழர் தரப்பு முன் வைப்பதற்கு

இலங்கையின் யோசனைகள் போதுமானவை அல்ல

திலகரத்தினவிடம் இந்தியா அறிவிப்பு

புதுடில்லி, மே 14

இலங்கை அரசின் யோசனைகள் தமிழர் தரப்பின் முன்னால் வைக்கப் போதுமானவையாக இல்லை.

இலங்கைத் தூதர் பேர்னட் திலகரத்தினவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சு இப்படித் தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டது

இலங்கைத் தூதர் பேர்னட் திலகரத்தின நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார். அப்போதே திரு திலகரத்தினவுக்கு இந்தியாவின் கருத்துக் கூறப்பட்டது.

இணை அமைச்சர் ப. சிதம்பரம் தலைமையிலான குழு மூலம் இலங்கை அரசு தெரிவித்த புதிய யோசனைகள், அவற்றில் காணப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

வீதித் தடைகள்

கொழும்பு, மே 15

அநுராதபுரத்தில் நேற்று ஏழு வீதித் தடைகள் போடப்பட்டன. சுமார் 300 பொலீஸார், சிப்பாய்கள் காவல் கடமைகளில் ஈடுபட்டனர்

அநுராதபுரம் படுகொலை நினைவு தினம் நேற்று

அதை ஒட்டியே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எல்லை மீறியவை — பொறுப்பற்றவை:

ஜெயவர்த்தன இப்படி பேசியிருக்கக்கூடாது

என்கிறார் சிவ்சங்கர்

புதுடில்லி, மே 14

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் கூற்றுக்கள் எல்லை மீறியவை; பொறுப்பற்றவை. முதிர்ந்த அரசியல்வாதி ஒருவர் இப்படிப் பேசி இருக்கக் கூடாது.

இந்திய வெளிநாட்டமைச்சர் பி. சிவசங்கர் மேற்கண்டவாறு கடந்த செவ்வாய்க்கிழமை, புதுடில்லி ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

திரு. ஜெயவர்த்தன அவுஸ்திரேலிய வானொலி, லண்டன் சண்டே டைம்ஸ் ஆகியவற்றுக்கு அளித்த பேட்டிகளில் இந்தியா பற்றியும் இந்தியப் பிரதமர் பற்றியும் தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் ராஜ்யசபை உறுப்பினர்கள் தெரிவித்த கண்டனங்களுக்குப் பதிலளிக்கையிலே வெளிநாட்டமைச்சர் சிவசங்கர் மேற்கண்டவாறு காரசாரமாகச் சொன்னார்.

தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் பிரதமர் ராஜீவ் காந்தி இடமளிக்கிறார்.

தீவிரவாதிகளை வெளியேற்றும்படி மேனாடுகள் திரு. காந்தியை வற்புறுத்த வேண்டும் - இப்படி எல்லாம் திரு ஜெயவர்த்தன கூறியிருந்தார்.

திரு. ஜெயவர்த்தனவின் கருத்துக்கள் குறித்து ராஜ்ய சபை உறுப்பினர்கள் ஆத்திரமடைந்து [illegible]. இது நியாயமானதே - இப்படிச் சொன்ன திரு சிவ்சங்கர் மேலும் கூறிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

நடைபாதை வியாபாரிகள் கலைக்கப்பட்டனர்

நல்லூர், மே 15

யாழ். பஸ்நிலையத்துக்கு அருகாமையில் இருந்த நடைபாதை வியாபாரிகள் நேற்று மாநகரசபை ஊழியர்களினால் கலைக்கப்பட்டனர்

இது தொடர்பாக நடைபாதை வியாபாரிகள் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானத்திடம் முறையிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நடைபாதை வியாபாரிகளுக்கு கஸ்தூரியார் வீதியில் உள்ள லொறி தரிப்பிடத்துக்கு அருகாமையில் ஒருபகுதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இப்பகுதியில் வியாபாரம் செய்யும்படி ஆணையாளர் பணித்துள்ளார்.

25க்கும் மேற்பட்ட நடைபாதை வியாபாரிகள் நேற்று முதல் இப்பகுதியில் தமது வியாபாரத்தைத் தொடங்கினர்.

ஆஸ்பத்திரி வீதி கரையோரமாக இருந்து வியாபாரம் செய்து வருபவர்களும் இதேபோல் அகற்றப்பட்டு அவர்களுக்கும் வேறிடம் ஒதுக்கிக் கொடுக்கப்படும் எனவும் ஆணையாளர் சொன்னார்.

சிப்பாய்கள் வெளியே வர நாவற்குழியில் பதற்றம்

கைதடி, மே 15

நேற்று நண்பகல் 12.00 மணி அளவில் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து சிப்பாய்கள் வெளியேறி ரயில் பாதையூடாக நாவற்குழி சந்தியை நோக்கி வந்தனர்.

அப்போது ஹெலிகொப்டர் ஒன்று மேலால் வட்டமிட்டுச் சென்றது.

ஏறக்குறைய 500 மீற்றர் தூரம் சிப்பாய்கள் வந்ததும் போராளிகள் அவர்களை எதிர்கொண்டு குண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

சிறிது நேரத்தில் சிப்பாய்கள் முகாமை நோக்கித் திரும்பிச் சென்றனர். இதன் பின்பு முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் மக்கள் பயந்து இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.

சிறிது நேரத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

தமிழ்த் தாயும் சிப்பாய் தந்தையும் கைது

கொழும்பு மே 15

இரண்டரை வயது ஆண்குழந்தையை மண்ணெண்ணை பருக்கிக் கொலை செய்தார்களாம்.

மீரிகம என்னும் இடத்தில் நடந்த இச் சம்பவம் தொடர்பாகச் சிறிய தந்தையும் தாயும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சிறிய தந்தை ஒரு இராணுவச் சிப்பாய். தாய் ஒரு தமிழ்ப் பெண்.

தாய் இராணுவச் சிப்பாயை இரண்டாந்தாரமாகத் திருமணஞ் செய்தார்.

முதல் கணவனுக்குப் பிறந்த பிள்ளைதான் [illegible]

இரண்டாம் கணவன் இராணுவச் சிப்பாய் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

இச் சமயத்தில் தான் மண்ணெண்ணை பருக்கி இரண்டரை வயது மகனைக் கொலை செய்ததாக தாயும் தந்தையும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

வெளிமாவட்ட ஆசிரியர்கள் பலர் கடமைக்கு திரும்பவில்லை

போக்குவரத்து சீர்கேடு காரணமாம்

கிளிநொச்சி, மே 15

முதலாம் தவணையின் பின்னர் பாடசாலைகள் தொடங்கி ஒரு வாரம் கழிந்தும் வெளி மாவட்டங்களில் கடமை ஆற்றும் வடபகுதி ஆசிரியர்கள் பலர் இன்னும் கடமைக்குத் திரும்பவில்லை என்று தெரிகிறது.

அண்மையில் நடந்த அசம்பாவிதங்களால் போக்குவரத்துச் சேவை மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதே ஆசிரியர்கள் பலர் கடமைக்குத் திரும்பாததற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

கடமைக்கு வராத ஆசிரியர்கள் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகவே கடமைக்கு சமூகமளிக்க முடியாதிருப்பதாக தமது பாடசாலை அதிபர்களுக்குத் தெரிவித்துள்ளனராம்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் வரவு மட்டுமன்றி மாணவர்கள் வரவும் குறைவாகவே காணப்படுகிறது

கிழிந்த நோட்டு: ஓய்வூதியக்காரர் பெரும் அவதி

பலாலி, மே. 15

யாழ். [illegible] ஓய்வூதியம் பெறச் செல்லும் ஓய்வூதியக்காரர்களுக்கு தற்போது புதிய "தலைவலி" ஒன்று ஏற்பட்டு வருகிறது

இவர்களுக்கு வழங்கப்படும் பணத்தில் கிழிந்த, கிழிந்து ஒட்டிய நோட்டுக்களும் தாராளமாக இடம் பிடித்துக் கொள்வதே இதற்குக் காரணம்.

வடக்கில் வங்கிகளில் தற்போது பணப் புழக்கம் இல்லாததால் இந்த கிழிந்த நோட்டுக்களை வர்த்தக நிலையங்களிலோ அல்லது வங்கிகளிலோ ஏற்க மறுக்கின்றார்கள்.

தபால் நிலையங்களுக்குப் போனாலும் இதே கதிதான் என்று அலுத்துக் கொண்டார். ஓய்வூதியக்காரர் ஒருவர்.

மட்டக்களப்பில்

விவசாயிகளுக்கு அடையாள அட்டை

மட்டக்களப்பு, மே 15

மட்டக்களப்பில் விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் பசளை அவர்கள் தம்முடன் எடுத்துச்செல்லவும் அவர்களுக்கு விசேட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மட்டக்களப்பு அரச அதிபரை மட்டக்களப்பு பிரஜைகள் குழு கடந்த திங்கட்கிழமையன்று சந்தித்தபோது இப்படி இணக்கம் காணப்பட்டது

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

திரு. எஸ். சண்முகநாதன், திரு. இரா. உதயகுமார், திரு. எஸ். சுந்தரம் ஆகியோர் பிரஜைகள் குழுவைப் பிரதிநிதித்துவம் செய்தனர்.

பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளால் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டம் பற்றி விபரமாக எடுத்துரைக்கப் பட்டது.

இது குறித்து மட்டக்களப்பு மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரியுடன் கதைத்து தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதாக அரச அதிபர் திரு எம். அந்தோனிமுத்து உறுதியளித்தார்.

முஸ்லிம் சம்மேளனம் ராஜீவிற்குத் தந்தி

மட்டக்களப்பு, மே 15

தமிழ் போராளிகளால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

மேற்கண்டவாறு காத்தான்குடி முஸ்லிம் அமைப்புகள், பள்ளிவாசல்கள் சம்மேளனம் இந்திய பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்துள்ள அவசர தந்தியில் குறிப்பிடுகிறது.

தந்தியின் பிரதிகள் இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப். அப்துல்சமது, தி.மு.க. தலைவர் டாக்டர் மு. கருணாநிதி, த.வி.கூ. தலைவர் அ. அமிர்தலிங்கம், எம்.சி. சந்திரஹாசன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டன.

பிரயாண ஒழுங்குகள்

- ● கனடா
- ● ஜேர்மன்
- ● பிரான்ஸ்
- ● டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொன்ட் (Bond) ரிக்கட் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவும்:

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியு;
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய்.

குறிப்பு:

ஜேர்மன், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு முற்பணம், பாஸ்போட் தந்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

வைத்தியம்

உங்கள் வியாதிகள் இன்னும் தீரவில்லையா? நரம்புத்தளர்ச்சி, ஆண், பெண் இருபாலாருக்குமான வியாதிகள், வெள்ளை, உடல் மெலிவு, ஸ்கலிதம், நாள்பட்ட எந்த வியாதியானாலும் இரகசிய வியாதிகள் எதுவானாலும் ஆயுர்வேத ஹோமியோபதி வைத்தியர்களின் கூட்டு ஆலோசனையைப் பெற முத்திரையுடன் விலாசமிடப்பட்ட கவர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வைத்திய ஆலோசகர்கள்,
173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போராளிகளை விடுவிக்குமாறு ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 15

சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட போராளிகள் அனைவரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுவிக்க வேண்டும் என்று ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) கேட்டிருக்கிறது.

"கசப்பான அனுபவங்கள் படிப்பினையாகட்டும்" என்ற தலைப்பில் ஈரோஸ் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை அடக்கி ஒடுக்கிவிட கங்கணம் கட்டி நிற்கும் மூர்க்கத்தனமான எதிரியின் முன்னே நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஒன்றுபடுதல் என்பது வெறும் வார்த்தைகளில் அல்லாமல் சூழ்நிலையை யதார்த்த ரீதியில் புரிந்து கொண்டு செயற்படுவதன் ஊடாக கட்டி எழுப்பப்படல் வேண்டும்.

விடுதலைக்காக இந்த மண்ணையும், மக்களையும் நேசித்து போராட புறப்பட்ட இயக்கங்களிடையே அண்மையில் ஏற்பட்ட மோதலானது துர்பாக்கியமானது, கசப்பான ஓர் அனுபவமாகும்

விடுதலைப் போராளிகளை வெறுமனே ஆயுதம் தாங்கிய காவலர்கள் என்ற கண்ணோட்டத்தில் மட்டும் அணுகி, சமூக மாற்றத்தின் உள்ளடக்கத்தைப் புரியாமல், மக்கள் அன்னியப் பட்டிருப்பது போராட்டத்தின் இத்தகைய துர்பாக்கிய சம்பவத் தொடர்ச்சிக்கே வழிவகுக்கும்.

மக்கள் இன்றைய அரசியல் போராட்டத்தின் சகல விழுமியங்களையும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்

வெறுமனே கோஷ்டிச் சண்டைகளை வேடிக்கை பார்ப்பது போலவோ, வெறும் மனிதாபிமான கண்ணோட்டத்தில் அணுகுவதனாலோ இன்றைய சிக்கல்கள் தீர்க்கப் படப் போவதில்லை என்பது தெளிவு.

ஈழத்தின் விடுதலைப் போராட்டமானது, ஈழத்தில் வாழும் மக்கள் அனைவரையும் தழுவியதாக ஒட்டுமொத்தமான அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக் கூடியதாக வடிவமைக்கப்படும் போதே வெற்றிப்பாதையில் வீறுநடை போட முடியும்

கடந்த காலத்தில் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நடந்தேறிய தவறுகளை மீள்பரிசீலனை செய்து சரியானதைத் திருத்திப்பார்த்து படிப்பதன் ஊடாக ஒவ்வோர் இயக்கமும் தன்னைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் இந்த மக்களின் தலைமைப் பாத்திரத்தை ஏற்கும் தகுதியை விடுதலைப் போராளிகள் பெறமுடியும்.

அண்மைய துரதிஷ்டவசமான கசப்பான அனுபவங்களிலிருந்தாவது மக்களை நேசித்து மதித்து நடக்கவும் மக்களுடன் ஐக்கியமாகி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும்

இந்த வகையில் கொலைகாரர்கள் என்னும் கொடுமுத்திரையை சுமக்காமல் மக்களின் மதிப்பைப் பெறும் நோக்கிலேனும், மனிதாபிமான அடிப்படையிலே, சரணடைந்த—கைது செய்யப்பட்ட போராளிகள் அனைவரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிள்ளையார் ஆலயத்தை புனரமைக்க ஏற்பாடு

கல்முனை மே 15

அக்கரைப்பற்று நகரில் அமைந்துள்ளதும், மிகப் பழமை வாய்ந்ததுமான ஸ்ரீமருதடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் 85ம் ஆண்டு ஏப்பிரல் இனக்கலவரத்தில் மிகவும் சேதமாக்கப்பட்டு இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை. புனரமைப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இவ்வாறு சேதத்தின் பெறுமதி சுமார் நான்கு இட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தை புனரமைக்க வேண்டிய ஏற்பாடுகளை, ஆலயத்தின் பிரதான தர்மகர்த்தா திரு. இ. நடராசா அக்கரைப்பற்று பிரஜைகள் குழு மூலமாக கவனித்து வருகிறார்

இதற்கான மகஜர்கள் அம்பாறை மாவட்ட அரச அதிபர், பொத்துவில் தொகுதி இரண்டாவது எம். பியும், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சருமான திருமதி. ரங்கா பத்மநாதன், பிராந்திய அபிவிருத்தி இந்து கலாசார தமிழ்மொழி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

கந்தளாயில் வழிப்பறிக் கொள்ளை

திருகோணமலை, மே 15

கந்தளாயில் சைக்கிள்களில் வந்து கொண்டிருந்த நான்கு பேரிடமிருந்து பொருட்கள், சைக்கிள்கள் இனந்தெரியாத நபர்களினால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொள்ளை இடப்பட்டன.

இரவு 9 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக கந்தளாய்ப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கட்டணம் உயர்ந்தது

மண்டைதீவு, மே 15

யாழ்— மண்டைதீவு போக்குவரத்து சேவையில் ஈடுபடும் மினிபஸ் கட்டணம் 50சதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது

இது குறித்து பிரயாணிகள் அதிருப்தியடைந்துள்ளார்கள்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடு இக்கட்டண உயர்வுக்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற அரச பயங்கரவாத இன ஒழிப்பு நடவடிக்கையில் மக்கள் மனதை விட்டகலாத
குமுதினி கோரப் படுகொலையின்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
சாந்தலிங்கம் குசலகுமாரி

செல்வி
அரியநாயகம் அனுஷியா

வடலியடைப்பு

அன்னையின் அளிப்பு. 25-11-1961 அன்னையின் அளிப்பு. 06 08 1963
ஆள்பவன் அழிப்பு 15-05-1985

குமுதினியில் நாமெல்லாம் கூடவே வரும்பொழுது ஓடியே வந்து, அக்கா, தங்கை உம் இருவருடன் 36 முத்தமிழ் இரத்தம் குடித்த, இரக்கமில்லா இலங்கையதன் கடற்படை கொடுங் கூட்ட வேட்டையாடி இன்று ஓராண்டு வந்திடினும் உம் நினைவோ நாள்தோறும் ஆறாத நினைவாக நிறைந்திடும் நெஞ்சமதை வாட்டுகின்ற வேளையிலும் இனிதே மலரும் ஈழத்தை எண்ணி எம் மனதைத் தேற்றுகிறோம்.

ஈழம் அமைய உங்களதும் ஆள்பவனால் பறிக்கப்பட்ட அனைத்துத் தமிழ் உயிர்களதும் ஆத்மாக்கள் சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

[illegible] அன்பின்,
[illegible] சா. சாந்தலிங்கம் [illegible], உறவினர்களும், நண்பர்களும்.

ருகுணு பல்கலைக்கழக மாணவர் சர்வதேச பயங்கரவாதத்துடன் தொடர்பு

கொழும்பு, மே 15

ருகுணு பல்கலைக்கழக மாணவர் சிலர் சர்வதேச பயங்கரவாதத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர் இதுபற்றி பொலிஸாரும் வளாக அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இத்தகவலை உயர்கல்வி பிரதி அமைச்சர் திரு. ஏ எம். ஆர். பி. அத்தநாயக்கா நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

ஒத்திவைப்புப் பிரேரணைமீது அக்மீமன சுதந்திரக் கட்சி எம். பி. திரு ரிச்சர்ட் பத்திரான பேசுகையில் கைதுசெய்யப்பட்ட பல்கலைக் கழக மாணவர் பற்றிக் குறிப்பிட்டார்.

அவர் சொன்னதாவது:

ருகுணு வளாகத்தில் கடந்த 147 தினங்களாக கலை, விஞ்ஞான வகுப்புகள் நடத்தப்படவில்லை.

11 மாணவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக இடைநிறுத்தஞ் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் பல மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆயுர்வேத வைத்தியக்கல்லூரியில் 145 மாணவர்கள் விரிவுரைகளில் கலந்து கொள்ள முடியாது தடுக்கப்பட்டுள்ளனர் கொழும்பு வளாகத்தில் 8மாணவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அமைச்சுச் செயலாளர் பல்கலைக் கழகங்களுக்கே செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்படி அக்மீமன எம். பி சொன்னார்.

பிரதி அமைச்சர் பதில் அளிக்கையில் சொன்னதாவது;

ருகுணு வளாக மாணவர் சிலர் சர்வதேச பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது இதுபற்றி விசாரணைகள் நடக்கின்றன.

திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி: அமைச்சர் அது பற்றி அறிக்கை சமர்ப்பிப்பாரா?

பிரதி அமைச்சர் மேலும் சொன்னதாவது:

கதேசிய வைத்தியப் பீடத்தில் 89 மாணவர் இடைநிறுத்தஞ் செய்யப்பட்டனர். 1985இல் 144 மாணவர் இடைநிறுத்தஞ் செய்யப்பட்டனர் மூன்று பரீட்சைகளைத் தொடர்ந்து எடுக்காத 89 மாணவரும் இடைநிறுத்தஞ் செய்யப்பட்டனர்.

கிரிமினல் சட்டத்தின்கீழ் 19 மாணவர் மீது வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

புதிய மாணவரை மானபங்கப்படுத்தியதற்காக 8 மாணவர் தற்காலிகமாக விலக்கிவைக்கப் பட்டனர்.

பல்கலைக் கழகத்தை உடைத்துக்கொண்டு உள்ளே வந்து பல்கலைக்கழக [illegible] அகற்றிச் சென்றதாக 5 மாணவர் இடைநிறுத்தஞ் செய்யப்பட்டுள்ளனர்

மாணவிகளை மானபங்கம் செய்ததற்காக களனி பல்கலைக்கழக மாணவர் ஐந்து பேர் இடைநிறுத்தஞ் செய்யப்பட்டுள்ளனர்.

மானபங்கஞ் செய்யப்பட்ட மாணவிகள் இன்னும் வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இப்படி பிரதி அமைச்சர் பதிலளிக்கையில் சொன்னார்.

மக்கள் முகம்

காவலூர் இலக்கிய வட்டம்

யாழ்ப்பாணம் மே 15

காவலூர் இலக்கிய வட்டத்தின் 6ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் கரம்பொன் சண்முகநாத வித்தியாலயத்தில் நடைபெற்றது.

திரு. ஆ. சபாரத்தினம் தலைமை வகித்தார்.

1986-87 நடப்பாண்டு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: ஆ. சபாரத்தினம் உபதலைவர்: கே ஏ ஜோர்ச் செயலாளர்: க. தவபாலன் உபசெயலாளர்: ஜே. நந்தகுமார் பொருளாளர்: இ. ஞானசேகரன் உபபொருளாளர்: இ. தவபாலன்.

செயற்குழு: ச. ஜெயராசா எஸ். லோகேந்திரலிங்கம் ஆ. அஞ்சலஸ் கே ஆர். சிவலிங்கம் சா. நிமாலிங்கம்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

● பப்புவா நியூகினி (Papaue Newguinea)

(Labour Licence No. 12)

1986 யூன் மாத முடிவுக்குள்

அவ்விடத்திற்கு தொழில் ஒப்பந்தத்துடன் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மேலதிக நேர வேலைக்கு ஊதியம் கொடுப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது

குறுகிய கால எல்லைக்குள் வேலை ஒப்புக் கொள்ள வேண்டியிருப்பதால் எமது கீழ்க் காணும் முகவர்கள் எவரையாவது

17-5-86க்கு முன்

தொடர்புகொண்டு உங்கள் தொழிலை நிச்சயப்படுத்தவும்

இருப்பிடவசதி, போசனம் ஆகியவை இலவசமாக அளிக்கப்படும்.

2 வருட ஒப்பந்த அடிப்படையில் வேலைவாய்ப்பும் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்படலாம்.

1.	பொது வேலையாட்கள்	ரூ.	9900-00
2.	சில்லறை வேலையாட்கள்	ரூ.	9900-00
3.	கோசன்	ரூ.	8800-00
4.	செங்கல் அடுக்குபவர்கள்	ரூ.	9200-00
5.	சிமெந்துக் கலவையாளர்கள்	ரூ.	8800-00
6.	அலுமினியம் வெல்டேர்ஸ்	ரூ	9900-00
7.	மின்சார வெல்டேர்ஸ்	ரூ.	9900-00
8.	பில்லிங் ஒப்பரேட்டர்ஸ்	ரூ	9200 00
9.	ரேடியேற்றர் கட்டரும் பைண்டரும்	ரூ.	9200-00
10.	ட்ரக் சாரதிகள்	ரூ.	10,300-00
11.	கனரக வாகன சாரதிகள்	ரூ.	12,600-00
12.	மெக்கானிக்குகள்	ரூ.	11,500-00
13.	சார்ஜ் ஹாண்டஸ்	ரூ	15,300-00
14.	சமையல்காரர்	ரூ.	9600-00
15.	சமையல் உதவியாளர்	ரூ.	8000-00

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

1. S. அல்பிரட்
   'சிலஇல்லம்', தேவாலய வீதி, மன்னார்.
2. V. நடராசா
   உரும்பராய் வடக்கு, உரும்பராய்
3. M. செல்வசுந்தரம்
   சின்னமலை, தொண்டைமானாறு
4. N. பாலசிங்கம்
   முதலாம் குறுக்குத் தெரு, காங்கேசன்துறை.

தலைமைப் பணிமனை:

முசீரா என்ரப்பிறைஸ்செஸ்
(Muzeera Enterprises)
P.O. Box No: 234,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு- 3.
தொலைபேசி: 574684, 573448
Telex: 21363 Jeya Co CE

உதய சங்கற்பம்

உண்மையின் பின்னே செல்லுங்கள்; அது எங்கு கொண்டு போய் விட்டாலும் கவலைப்படாதீர்கள்.

- சுவாமி விவேகானந்தர்

உதயன்

இல. 15 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி 24805
22073
15 05 86
த. பெ. 23

இன்னும் இழுத்தடிபடும் நிலையில் தான்....

வடக்கு, கிழக்குக்கு ஓரளவு சமஷ்டி ஆட்சி வழங்கும் விதத்தில் எமது புதிய யோசனைகள் அமைந்துள்ளன. அவற்றைத் தமிழர்கள் நிராகரித்தால் இராணுவத்தீர்வு காணுவதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா லண்டன் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் சண்டப் பிரசண்டம் செய்திருக்கிறார். ஒரு வகையில் யுத்தப் பிரகடனமே செய்திருக்கிறார் என்றும் சொல்லலாம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தியத் தூதுக்குழுவின் தலைவராக வந்து, இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன் புதிய கருத்துக்களை — யோசனைகளை எடுத்துச் சென்றவர் திரு ப. சிதம்பரம் இலங்கையின் புதிய திட்டம் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வனவாக இல்லை என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கியதான புதிய மாற்று யோசனையைச் சமர்ப்பிக்குமாறு இலங்கையை இந்தியா கேட்டிருக்கிறது. இவ்வாறு இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் திரு பி. சிவசங்கர் தனது நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவின் உதவியுடன் இணக்கமான புதிய யோசனைகள் உருவாகுமானால், தமிழர் அமைப்புகளுடன் பேசுவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருக்கிறது. இவ்வாறு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

வானத்திலிருந்து சந்திரனையும், அண்ட சராசரத்தில் இருந்து சொர்க்கத்தையும் தமிழ் மக்களுக்குக் கொடுக்கும் விதத்தில் தமது புதிய திட்டம் அமைந்திருப்பதாக ஜனாதிபதியவர்கள் கதை இருக்கிறது. அதுதான் தம்மால் வழங்கக் கூடிய ஆகக்கூடிய தீர்வு என்று அவர் கருதியிருக்க வேண்டும். இல்லையேல் இராணுவத் தீர்வு கண்டு அந்தத் திட்டத்தைத் தமிழ மக்களுக்குத் தாம் வழங்கும் "பிச்சை"யாக கொடுக்கலாம் என நினைத்தாரோ என்னவோ!

இனப்பிரச்சினை இத்தனை வருடமாக இழுத்தடிபடுவதற்கு சிங்கள அரசாங்கங்களே காரணம். தாம் வழங்கும் சலுகைகளோடு தமிழர்கள் திருப்திப்படவேண்டும் என்று அவை நினைக்கின்றன. தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவது தமக்குள்ள கடமையல்ல என்று அவை எண்ணுகின்றன. தமிழ் மக்களின் அபிலாசைகளை நியாய சிந்தையுடன் நிறைவேற்ற வேண்டும் என்ற நினைப்பும் அவற்றுக்குக் கிடையாது.

ஜனாதிபதியின் கூற்றும் அவற்றையே மேலும் ஊர்ஜிதமாக்குகிறது.

சிங்கள மக்களுக்கு உள்ள சொத்துச் சுகத்தைப் பறித்துத் தங்களுக்குத் தருமாறு தமிழர்கள் கேட்கவில்லை. தமைத்தாமே ஆளும் தமது பிறப்புரிமையைத்தான் அவர்கள் கேட்கிறார்கள்.

தாம் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வரும் தமது சொந்த மண்ணில் — தாயகத்தில் தாமும் உலகின் மற்ற மக்களைப் போல் சுதந்திர புருஷர்களாக வாழவேண்டும் என்றே தமிழர்கள் விரும்புகின்றனர். அதுவே அவர்களது பிரதான அபிலாஷையும்.

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படவேண்டுமானால் இந்த விடயத்தைப் புரிந்து கொண்டே திட்டம் தயாரிக்கப்படவேண்டும். இல்லையேல் இனப் பிரச்சினை "சுற்றிச் சுற்றி சுப்பற்ற கொல்லைக்குள்" நிற்கும் விவகாரமாகவே முடியும்.

அது தப்பி இராணுவத் தீர்வு என்று புறப்பட்டால் நாட்டின் — மக்களின் அழிவில் ஒரு புதுவழி பிறக்கும் அவ்வளவு தான்.

முந்திய பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்களைத்தான் சரித்திரம் என்று ஒதுக்கி வைத்துவிடலாம். 1983 ஜூலையில் நடந்த இரத்தக் களரியின் பின்னர் கடந்த சுமார் மூன்று வருடங்களாக, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு சிறு அறிகுறியாவது தென்பட்டதா? ஒரு மின்னல் ஒளிக்கீறலாவது தெரிந்ததா?

பேச்சுவார்த்தை, யோசனை, திட்டம், மாநாடு என்று காலம் கரைந்ததே அன்றி கண்ட பலன் எதுவுமில்லை. கொழும்பு, டெல்லி, திம்பு, டாக்கா, பஹாமாஸ் என்றும் சந்திப்புகள், தூதுக்குழுக்கள் என்றும் பத்திரிகைச் செய்திகள் வந்தனவே அன்றி ஒரு படியாவது முன்னேற்றத்தைக் காணோம்.

இனப்பிரச்சினை விவகாரம் எப்போதும் இருண்ட விவகாரமாக இருக்கிறதே அன்றி நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. இப்போதும் அந்த இழுத்தடிபடும் நிலைதான்.

மிளகாய் இல்லை

யாழ்ப்பாணம், மே 14

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகளுக்கு கடந்த சில வாரங்களாக தரமான மிளகாய் விநியோகிக்கப்படவில்லை.

கடந்த வருடம் பாவனைக்கென அனுப்பப்பட்ட சிறிய மிளகாயே இன்னமும் அவர்களிடம் இருப்பதால் இப்பகுதி மக்கள் நல்ல மிளகாய் பெறுவதில் சிரமப்படுகிறார்கள்.

அக்கரைபற்று; ஒருவர் மரணம்

அக்கரைப்பற்றில் நல்லதம்பி சிவதம்பு (வயது 33) என்பவர் கத்திக் குத்துக்கு உள்ளாகி பின்னர் மரணம் அடைந்தார்.

இவரின் மரணம் தொடர்பாக அப்புக்குட்டி சுப்பிரமணியம் என்பவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

—மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய கல்முனை மாவட்ட பதில் நீதிவான் ஜனாப் மீரா சாஹிபு கொலை எனத் தீர்ப்பு அளித்தார்.

இன ஒடுக்கலுக்கு எதிராக

பாரதம் ஆதரவு

வழங்கும் என்கிறார் ராஜீவ்

புதுடில்லி, மே 14

இன ஒடுக்கலின் கொடுமைகளை அனுபவிக்கும் ஆபிரிக்க நாடுகளின் மக்களுக்கு பாரதத்தின் ஆதரவைத் தெரிவிப்பேன்.

இவ்வாறு பிரதமர் ராஜீவ்காந்தி பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போது தெரிவித்தார்.

ஸாம்பியா, ஸிம்பாப்வே, தன்ஸானியா, அங்கோலா ஆகிய நான்கு ஆபிரிக்க முன்னணி நாடுகளுக்கு பிரதமர் 5 நாள் அரச முறைப் பயணம் மேற்கொண்டு செல்கிறார்.

பயணத்தைத் தொடங்கு முன் விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களின் கேள்விக்கு காந்தி பதிலளித்தார்.

நமீபியாவின் சுதந்திரப் பிரேரணையை இங்கு முன் வைப்பீர்களா என்று கேட்கப்பட்ட போது; ஆபிரிக்கத் தலைவர்களுடன் இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்கப்படும் என்றார்.

நமீபியாவை ஏப்பம் விட்டுள்ள தெ. ஆபிரிக்க பிரிட்டோரிய அரசின் போக்கை பிரதமர் கண்டித்தார்.

ஆபிரிக்க நாடுகளின் இன ஒடுக்கலுக்கு எதிரான சுதந்திரப் போராட்டங்களைப் பாரதம் ஆதரித்து வருகிறது.

ஸிம்பாப்வேயில் அடுத்து நடைபெற இருக்கும் அணிசேரா அமைப்பின் கூட்டம் தொடர்பாகவும் அதன் பணிகள் தொடர்பாகவும் தலைவர்களுடன் ராஜீவ் விவாதிப்பார் எனக் கூறப்படுகிறது.

பயணத்தின் முதற் கட்டமாக லூசாக்கா நோக்கிச் செல்லும் பிரதமருடன் திருமதி சோனியா காந்தியும் புதிய வெளியுறவு அமைச்சர் சிவசங்கருடன் மற்றும் ராஜ் வெளியுறவுத்துறை அமைச்சர் கூடச் செல்கிறார்கள்.

மறைந்த தலைவரின் பிறந்த நாள் நினைவு

டெல்லி, மே 14

பாரதமுன்னாள் ஜனாதிபதியாக இருந்த மறைந்த பக்ருதீன் அலி அகமதுவின் 81-து பிறந்த தினம் டெல்லியில் நினைவு கூரப்பட்டது.

அவரது சமாதியில் மலர்வளையங்கள் சாத்தப்பட்டன. புஷ்ப அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. குரான் ஓதப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மறைந்த ஜனாதிபதியின் மனைவி பேகம் அபிதா அகமதுவும் குடும்பத்தினரும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

புதிய கல்வி முறையில் வேறுபாடுகள் விலகும்

பாரத மனித வளத்துறை அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, மே 14

இப்போது இருந்து வரும் கல்வித் திட்டத்திலுள்ள குறைபாடுகளையும் வேறுபாடுகளையும் இனி வரப்போகும் புதிய தேசிய கல்விக் கொள்கை இல்லாமற் செய்துவிடும்.

இவ்வாறு பாரத மனித வள அபிவிருத்தித்துறை அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்விக் கொள்கை மசோதா தொடர்பான 2 ஆம் நாள் விவாதத்தை ராஜ்ய சபையில் முடித்துவைத்து நரசிம்மராவ் உரையாற்றினார்.

அடுத்து அவர் தொடர்ந்து பேசுகையில்,

அடுத்த பாராளுமன்றத் தொடரில் கல்விக் கொள்கை தொடர்பான முழுமையான செயல் திட்டங்களை அமைச்சு முன்வைக்கும்.

1968ஆம் ஆண்டு அரசுக்கொள்கையின் மும்மொழித் திட்ட அடிப்படையில் தேசிய கல்விக் கொள்கை நடைமுறைகள் வகுக்கப்படும்.

இதன்கீழ் அமைக்கப்படும் சர்வோதயக் கல்விக்கூடங்கள் வாய்ப்பற்றோருக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தும் நோக்கத்தையும் நாட்டின் ஒருமைப்பாடு பேணும் குறிக்கோளையும் கருத்திற் கொண்டதாகும் எனத் தெரிவித்தார்.

பறவைகளை வழி மாற்ற புதிய குழு

சென்னை, மே 14

விமானங்கள் பறக்கும் பொழுது பறவைகளும் பறந்து விபத்து விளைவிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால் இதைத் தடுக்க கமிட்டி ஒன்று சென்னையில் உருவாக்கப்பட்டது.

சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய விமான நிலையங்களில் இக்கமிட்டியின் உபகுழு செயற்படும்.

கராச்சியில் ஊரடங்கு

கராச்சி, மே 14

பாகிஸ்தானின் கராச்சியின் பல பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

பஸ் விபத்தொன்றில் ஒரு பையன் இறந்ததை அடுத்து இரு சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலை நிறுத்தவே ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

பஸ்ரோன் மொழி பேசும் பாகிஸ்தானியருக்கும் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய உருது மொழி பேசும் சமூகத்துக்கும் இடையே இந்த மோதல் மூண்டது.

இம்மோதலில் பல வாகனங்கள் கடைகள் என்பன சேதப்படுத்தப்பட்டதாகவும் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்துள்ளன.

வெளி உலகில்

அமெரிக்காவின் ஆதரவு நாடுகளை பகிஷ்கரிக்கவேண்டும்

கடாபி கோருகிறார்

திரிப்பொலி, மே 14

அமெரிக்க அடாவடித்தனங்களை ஆதரிக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் கிழக்கு நாடான ஜப்பானையும் பொருளாதார ரீதியில் பகிஷ்கரிக்க வேண்டும்.

இவ்வாறு திரிப்போலியில் நடந்த கூட்டமொன்றில் லிபியத் தலைவர் கடாபி நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமெரிக்க 6-வது கடற்படை நடமாட்டத்தையும் கடாபி கடுமையாகக் கண்டித்துள்ளார்.

வெளியேற்ற உத்தரவு

திரிப்பொலி, மே 14

லிபியா 7 மேற்கு நாடுகளைச் சேர்ந்த 36 இராஜதந்திரிகளை நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சட்ட மேலவையை கலைக்க வேண்டாம்

சென்னை, மே 14

தமிழ் நாடு சட்ட மேலவை கலைக்கும் தீர்மானத்தைக் கைவிடுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தி. மு. க., பாரதயூனியன், முஸ்லிம் லீக், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, திராவிடர் கழகம் ஆகியன இக்கோரிக்கையை முன்வைத்துள்ளன.

தேரரின் வடபகுதி அனுபவங்கள்!

இராணுவமும்-பொலிஸும் சிங்களவருக்கே ஆதரவானவை

இது தமிழ் மக்களின் தீர்க்கமான முடிவு

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியாக இருந்தவர் வண தெல்கெல்ல பதும சிரி தேரர்.

'யாழ்ப்பாணத்தில் என் அனுபவங்கள்' — என்ற தலைப்பில் அவர் சிங்களத்தில் எழுதிய புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'சற்றர்டே ரிவியூ' ஆங்கில வார இதழில் பிரசுரமானது.

அதன் தமிழ் மொழி பெயர்ப்பின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

எப்போதாவது ஒரு சம்பவம் இடம்பெற்றால் அப்பகுதி மக்கள் பொலிஸார், இராணுவத்தினரின் ஆத்திரத்துக்கு வேண்டியுள்ளனர்.

இதனால் சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்ட தமிழ்மக்கள் வன்செயல்கள்மூலம் தங்களைக் காப்பாற்றவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

காலம் செல்லச் செல்ல தமிழ் இளைஞர் மத்தியில் உள்ள சில சக்திகள் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பல ஆண்டுகளாக வாழ்ந்துவந்த சிங்கள மக்களைத் துரத்தத் தொடங்கின.

இப்பகுதிகளில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் புனரமைக்கப்பட்ட விகாரைகளில் வாழ்ந்து வந்த பிக்குகளும் துரத்தப்பட்டனர்.

இந்த வணக்கத் தலங்கள் கொள்ளை இடப்பட்டன. இது அநீதியானது.

எவ்வளவு கஷ்டமத்தியிலும் தமிழ்மக்கள் இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் வாழமுடியும்.

இதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களவரும் பௌத்த பிக்குகளும் அமைதியாக வாழும் சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

வடபகுதிமக்கள் இன்று அமைதியான ஒழுங்கான வாழ்க்கையை வாழமுடியாது உள்ளது.

அதிகாரத்தில் உள்ளவர்கள் இந்நிலையைச் சரிபார்க்கவேண்டும். சிங்களவரல்லாத அந்த மக்கள்மீது காட்டப்படும் அநீதிகள் களையப்பட்டு, நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

இராணுவமும் பொலிஸும் சிங்களவர்களுக்கு ஆதரவானவை என்பது தமிழரின் தீர்க்கமான முடிவு. இந்த எண்ணத்தை மாற்றவேண்டும். போதனையால் அல்ல செயல்மூலம் இம் மாற்றத்தை உருவாக்க வேண்டும்.

அதிகாரத்திலுள்ளோரின் குறுகிய மனப்பான்மை, ஆத்திரமூட்டும் அடக்குமுறைக் கொள்கை, இனமோதல்கள் காரணமாக கடந்த சில ஆண்டுகளில் ஆயிரக்கணக்கானோர் மாண்டுவிட்டனர். பலர் முடமாக்கப்பட்டனர், பலர் வீடுகளை இழந்தனர்.

வடபகுதித் தமிழர் மட்டுமல்ல, நாட்டில் உள்ள சகலருமே பயம் கவலையுடன் வாழ்கின்றனர். திடீர் மரணம் அவர்களைப் பயமுறுத்துகிறது.

அரசாங்கம், அரசியல் கட்சிகள், சகல சமயங்களின் குருபீடங்கள் அனைத்துக்கும் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

வடபகுதியில் அப்பாவி மக்கள் படும் மனவேதனை, திடீர் மரணம் ஏற்படும் என்ற பயம் ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து அங்கு அமைதி நிலவ எடுக்கக்கூடிய தேவையான நடவடிக்கைகளை உடனே எடுங்கள் என்பதே நான் விடுக்கும் வேண்டுகோளாகும்.

பிக்குகளுக்கு நான் ஒரு விசேட வேண்டுகோளை விடுக்கின்றேன்.

அன்பு, கருணை ஆகியவற்றை வைத்துத்தான் பௌத்த பிக்குகளாகிய நாம் தியானம் செய்கிறோம்.

"எல்லா உயிரினப் பிராணிகளும் சந்தோஷமாக இருக்க வேண்டும்" என்று நாம் சொல்லும் போது, அவை சிங்களவர்களை மட்டும் குறிக்கவில்லை. தமிழ் மக்களையும் சேர்த்துத்தான் கூறப்படுகின்றது.

இன, மத, சாதி பேதங்கள் பௌத்தத்துக்கு இல்லை.

புத்த பிரான் கூறியபடி, சமாதானத்தின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். யுத்தத்தின் மூலம் அல்ல.

இதை தலையாயமாக வைத்து அன்பு, கருணை ஆகியவற்றின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை பௌத்த பிக்குகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும்.

(முற்றும்)

பொய்யாமொழி

குறள்:

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

பொருள்:

வரம்பு கடந்து பிறர் செய்த தீமையை எப்போதும் பொறுக்க வேண்டும். அத்தீமையை நினைவிலும் கொள்ளாமல் மறந்து விடுதல் பொறுத்தலை விட நல்லது.

வாசகர் திருமுகம்

கிளிநொச்சியில் எரிபொருள் தட்டுப்பாடு : ஒரு விளக்கம்

கிளிநொச்சியில் எரிபொருள் தட்டுப்பாடு என்ற தலைப்பில் 23-4-1986 ஆம் திகதிய உதயன் இதழின் இரண்டாம் பக்கத்தில் வெளியான செய்தி, எங்களை மிகவும் மனவேதனை அடைய வைத்துள்ளது.

நாங்கள் எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனம் மூலம் எரிபொருள்களைப் பெற்றுக் கொடுக்கிறோம்.

வாகனக் கூலியாகப் பெருந்தொகை பணம் செலவிடுகிறோம். இதன் காரணமாகவேதான் எரிபொருளை நீங்கள் குறிப்பிட்ட விலைக்கு விற்கவேண்டியவராய் இருக்கின்றோம்.

உண்மை இதுவாக இருக்கையில் நாங்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விலையை அதிகரித்து விற்கவில்லை.

கிளிநொச்சி — திருமதி. பி. தம்பிப்பிள்ளை

அருள்நெறி பரப்ப பாடசாலைகளை மேடைகளாக பயன்படுத்த வாய்ப்பு

அருளாளர் ஒன்று கூடல் நிகழ்ச்சியில் கல்வி அதிகாரி

வட்டுக்கோட்டை, மே 15

இன்று நாட்டில் நடைபெறும் தீய செயல்கள் அழிவதற்கு நாம் எல்லோரிடமும் அன்பு செலுத்த வேண்டும். அருள்நெறிக்கிணங்க வாழ்க்கை நடத்த வேண்டும். அருள் ஞானத்தைப் பரப்பச் சகலரும் முன்வரவேண்டும்.

அருள் நெறியைப் பரப்ப பாடசாலைகளை மேடையாகப் பயன்படுத்தலாம்.

அகில உலக அருள் நெறி மன்ற இலங்கைக் கிளை சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் அருளாளர் ஒன்று கூடல் நிகழ்ச்சியை நடத்தியது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா மேற்கண்டவாறு கூறினார்.

இளைப்பாறிய கல்வி நிர்வாகி திரு சோ. க. வேலாயுதர் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய திரு. ப. சண்முகராசா தொடர்ந்து கூறியதாவது:

அருள்நெறியில் வாழ்வோர் எக்காலமும் தீய செயல்களில் ஈடுபடமாட்டார்கள். அருள்நெறியை பாடசாலைகளில் வளர்க்கவேண்டும். கல்வித் திணைக்களம் இதற்கு தக்கவாறான உதவிகளைச் செய்யும். இப்படி அவர் கூறினார்.

குழந்தைக் கவிஞர் க. சு. கந்தசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். இதைத் தொடர்ந்து—

தலைவர் திரு. சோ. க. வேலாயுதர் தலைமையுரை நிகழ்த்தும் போது இன்று நம்மிடையே ஏற்பட்டுள்ள பீதி, அச்சத்தைப்போக்க வேண்டுமானால் இறைவனைப் பிரார்த்தனை செய்யவேண்டும் எனத் தெரிவித்தார்.

அருளியல் வளர்ச்சிக்கு முதல் ஆதாரம் பொருளாதாரமே என்ற பொருளில் கிளிநொச்சி குருகுலத்தைச் சேர்ந்த திரு. வே. கதிரவேலு உரை நிகழ்த்தினார்.

சுழிபுரம் விக்டோறியா கல்லூரித் தமிழ்விரிவுரையாளர் பண்டிதை பொன் பாக்கியம், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அதிபரும் வடமாகாண அதிபர் சங்கத் தலைவருமான திரு க. அருணாசலம், முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி திரு கனகசபாபதி ஆகியோர் முறையே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ஹண்டி பேரின்பநாயகம், முதலியார் செ. இன்னத்தம்பி ஆகியோரைப்பற்றி நினைவு அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

அகில உலக அருள் நெறி மன்ற இலங்கைக் கிளையின் பிராந்திய உபகுழுக்கள் அமைக்கப்பட்டன.

இணைச்செயலாளர் புலவர் வே. கனகசபாபதி நன்றி நவின்றார்.

தொழிற்சாலைகளில்
இயந்திர சாதன பராமரிப்பு, திருத்த வேலைகள், புதிய இயந்திரங்களை வடிவமைத்தலும் உருவாக்குதலும்
ஆகியவற்றுக்கு அனுபவம் மிக்க எமது பொறியியலாளர்களின் சேவையை நாடுவீர்!
Dynamic Eng, Ltd.
476, பிரதான வீதி, சுண்டுக்குளி.
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

உதயன்

15.05.1986 வியாழக்கிழமை

கட்டிட ஆலோசனைகள்
() கட்டிடப் படங்கள் வரையவும்
() செலவு மதிப்பிடவும்
() ஒப்பந்த அடிப்படையில் கட்டிடம் அமைக்கவும்
கல்வித் தகைமையும் அனுபவமும் மிக்க எமது பொறியியலாளர்களின் சேவையை நாடுவீர்!
Dynamic Eng., Ltd.
476, பிரதான வீதி, சுண்டுக்குளி.
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

மருமகனுக்கு மாமியார் மிளகாய் தூள் அபிஷேகம்

நல்லூர், மே 15

மாமியாரின் போக்கைக் கண்டித்த மருமகன் ஒருவர் மாமியாரின் மிளகாய்த் தூள் அபிஷேகத்துக்கு உள்ளானார்.

அந்த மருமகன் தாக்குதலுக்கும் உள்ளாகி அவர் யாழ். பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

நாவடி வடக்கைச் சேர்ந்த நன்கு பிள்ளைகளின் தந்தையான ஒருவரே மாமியாரின் தாக்குதலுக்கு உள்ளானவர் ஆவார்.

இவர் பல காலமாக தனது மாமியாரின் போக்கை கண்டித்து வந்தாராம்.

சம்பவதினம் மருமகன் வழமைபோல் கடமை முடிந்து வீடு திரும்பியதும் மாமியார் இவர் மீது மிளகாய்த்தூள் கரைத்து ஊற்றினாராம்.

அதனைத் தொடர்ந்து வேறு பலரும் கத்தி, உலக்கை, அலவாங்கு போன்ற ஆயுதங்களினால் அவரைத் தாக்கினர் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

கோப்பாய் - கைதடி பாலத்தால் போக்குவரத்து செய்யமுடியாத நிலை உருவாகிறது

கைதடி, மே 15

கோப்பாய் - கைதடி பாலத்தினூடான வாகன போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்படும் சாத்தியம் தென்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை லொறி ஒன்று இப் பாலத்தின் மேலால் செல்லும் போது சில்லு தண்டவாளத்தில் சிக்கியது.

இதனால் இரு மணித்தியாலங்கள் வாகனப் போக்குவரத்து இப் பாலத்தில் தடைப்பட்டது.

வாகனங்கள் செல்லும் போது பாலத்தில் போடப்பட்டுள்ள தண்டவாளங்கள் விலகுவதனால் பிரயாணம் செய்வோர் சிரமப்படுகின்றனர்.

பஸ், மினிவஸ்களில் பிரயாணம் செய்யும் பயணிகள் இச்சமயம் பாலத்தடியில் இறங்கி வாகனம் பாலத்தைத் தாண்டியதும் ஏறி பிரயாணம் செய்கின்றனர்.

இந்தப் பாலம் சமீபத்தில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும் [illegible] தண்டவாளம் மூலம் பாலத்தைத் திருத்தி போக்குவரத்துக்கு வழி செய்ததும் தெரிந்ததே.

லொறி . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமில் மறித்து வைக்கப்பட்டன.

சாரதிகளும் நடத்துநர்களும் கைது செய்யப்பட்டு முகாமில் வைக்கப்பட்டனர்.

இது சம்பந்தமாக யாழ்-அரசாங்க அதிபர் வவுனியா இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அனுமதி பத்திரம் வழங்கப்பட்ட சந்தேகம் இல்லாத லொறிகளை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

வர்த்தகரின் சகோதரர் தாக்கப்பட்டார்

நல்லூர், மே 15

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள கடை ஒன்றின் உரிமையாளரின் சகோதரன் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டார்.

வானொன்றில் ஆயுதபாணிகளாக வந்த பத்துக்கும் மேற்பட்டவர்களே இவரைத் தாக்கினார் என்று தெரிய வருகிறது.

LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI.

ஏல விற்பனை

பாவிக்கப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள், "ஆங்கில் அயன்கள்" (Angle Iron) 'H' வடிவ உருக்குத் திராந்திகள், ஆயுதங்கள் என்பன 1986 - 05 - 18, 1986 . 06 - 01 ஆகிய இரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9-00 மணி முதல் லங்கா சீமெந்து லிமிடெட் தொழிற்சாலையில் ஏலவிற்பனையில் விடப்படவுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1986 - 05 - 17, 1986 - 05 - 31 ஆகிய இரு சனிக்கிழமைகளிலும் காலை 9 00 மணி முதல் மாலை 4 00 மணி வரை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 8 ஆம் கூற்று முடிவடைந்தவுடன் முழுத்தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணம், கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்படவேண்டும்.

பொருட்களைப் பகுதி பகுதியாகக் கொள்வனவு செய்வோர் ஏலவிற்பனைத் திகதிகளான 1986-05-18 1986-06-01 ஆகிய தினங்களிலிருந்து இரண்டு (02) நாட்களுக்குள்ளும் முழுக்கூறுகளும் ஒன்றாகக் கொள்வனவு செய்வோர் மேற்குறிப்பிட்ட தினங்களிலிருந்து ஐந்து (05) நாட்களுக்குள்ளும் விற்கப்பட்ட பொருட்களை அகற்ற வேண்டும்.

பொது முகாமையாளர்
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

1986 05.13.

குருநகரில் குடி தண்ணீர் குழாய் சேதம்

விநியோகம் பாதிப்பு

நல்லூர், மே 15

குருநகரில் குடிதண்ணீர் குழாய் நேற்று முன்தினம் சட்ட விரோத பாவனையாளர்களால் சேதமாக்கப்பட்டது.

இதனால் குருநகரில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குருநகருக்கு யாழ் மாநகரசபை, குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகித்து வருகின்றது.

இந்தக் குழாய்களில் இருந்து பலர் சட்ட விரோதமாக குடிதண்ணீர் பெற்று வருகின்றனர்.

இப்படி சட்ட விரோதமாக குடிதண்ணீர் பெற்றுக் கொள்ள முனைந்த ஒருவர் ஆறு அங்குல விட்டமுடைய பெரிய குழாயை சேதப்படுத்தி விட்டதால் இப்பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகம் துண்டிக்கப்பட்டு விட்டது என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக யாழ் மாநகரசபை ஆணையாளர் தகவல் தருகையில்;

ஆறு அங்குல விட்டமுடைய தண்ணீர்க் குழாய் யாழ்ப்பாணத்தில் இல்லாத படியால் தற்போதைய சூழ்நிலையில் உடனடியாக இப்பகுதிக்கு குடிதண்ணீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

குருநகர் பகுதியில் சட்டவிரோதமாக குடிதண்ணீர் குழாய் பொருத்தியிருப்பவர்கள் அவற்றை அகற்றி விடுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோடு குருநகர் பகுதியில் இருக்கும் ஸ்தாபனங்கள், இளைஞர் ஒன்றியங்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து இப்படியான சட்ட விரோத குழாய் இணைப்புகளை நிறுத்திக் கொள்ளவேண்டும். அதன் பின்னரே மீண்டும் இப்பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

தமிழ்ப் பிரதேசங்களை யாருக்கும் அடகு வைக்க இடம் கொடுத்தலாகாது

விடுதலைப் புலிகள் பிரமுகர்

கரவெட்டி, மே 15

எமது தமிழ்ப் பிரதேசங்களை, அன்னியர்கள் எவருக்கும், அவர்கள் யாராக இருந்தாலும் அடகு வைக்க எவரும் இடம் கொடுத்தலாகாது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அவ்வாறான ஒரு நோக்குடன் இயங்கியது. அதனாலேயே நாம் அதன் உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்க நேர்ந்தது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வடபகுதிப் பொறுப்பாளரான கிட்டு நெல்லியடியில் இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்ட பிரஸ்தாப கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்ததாவது :-

இன்று நாம் எமது சுதந்திரத்திற்காக பல வேறுபட்ட இன்னல்கள் இடையூறுகள் மத்தியில் போராடுகிறோம். இந்த சூழ்நிலையில் எமது தமிழ்ப் பிரதேசங்களை அன்னியரிடம் அடகு வைத்து எம்மையும் எமது நாட்டு மக்களையும் அடிமைப்படுத்தி வருகின்ற புத்திஜீவிகளை அழித்தொழிக்கும் நோக்குடன் தமிழீழ விடுதலை இயக்கம் செயற்பட்டு வந்தது.

அதனால் தமது இயக்கம் அண்மைக் காலத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் மீது நடவடிக்கை மேற்கொண்டது. இத் தாக்குதலின் நோக்கம் "ரெலோ" இயக்கத்தின் சில பிற்போக்குவாதிகளை நீக்குவதுதான்.

ஆனாலும் அவர்களைச் சரணடையும்படி நாம் வேண்டினோம். அவர்களில் பலர் சரணடைந்தனர். ஆனால் எமது போராளிகளின் மேல் எதிர்த் தாக்குதலை நடத்தியவர்களை நாம் ஒழித்துக்கட்ட வேண்டி ஏற்பட்டது.

இன்று நாம் மக்களுக்காக போராடுகிறோம். மக்களுக்காக நாம் போராட விளைகின்ற எமது முகாம்களை சுற்றிப் பாதுகாப்புச் செய்தால் வேதனையானது. நாங்கள் மக்களுக்காக போராடுவதால் தான் இராணுவ முகாம்களைச் சுற்றிக் காவல் புரிகிறோம். இக்காவல் நோக்கில் எமது உயிர்களைப் பணயம் வைத்தே போராடுகிறோம் இவ்வாறு அவர் சொன்னார்.

கருத்தரங்குக்கு வந்திருந்த பொதுமக்கள் பலரின் கேள்விகளுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் பதிலளித்தனர்.

ஜெயவர்த்தன..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தாவது;

திரு ஜெயவர்த்தனவின் கருத்துக்கள் எல்லை மீறியவை ஆதாரமற்றவை. பொறுப்பற்ற முறையில் திரு ஜெயவர்த்தன கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

முதிர்ந்த அரசியல்வாதியான திரு ஜெயவர்த்தன இப்படிப் பேசியிருக்கக்கூடாது. கருதம் ஆயுதங்கள், நிதி பெற இது கூறப்பட்டவையாகில் [illegible] இப்படி வெளியிலவரை [illegible]

அனுராதபுர . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் நடத்துநரான நடராசா என்பவரும் ஆயுதப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டனர்.

பஸ்ஸூம் தடுத்து வைக்கப்பட்டது.

பஸ்ஸில் வந்த பிரயாணிகள் வேறு பஸ் மூலம் ஆயுதப்படையினரின் உதவியுடன் வவுனியா வரை அனுப்பி வைக்கப்பட்டனர்.

யாழ் ஆஸ்பத்திரி மருந்து வகைகளும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் ஆஸ்பத்திரி அதிகாரத்தில் மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பஸ்ஸில் தடுத்து வைக்கப்பட்ட மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ள யாழ் வைத்திய அதிகாரி [illegible]

விளையாட்டரங்கு

ரந்தாட்டம்

யாழ். உதவி அரசஅதிபர் பிரிவு பெண்கள் அணி வெற்றி

யாழ்ப்பாணம், மே 13

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற பெண்களுக்கான எறிபந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி சாம்பியனானது.

இந்த அணி இறுதியாட்டத்தில் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணியை 14 - 1, 14 - 1, 14-2 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

யாழ் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான போட்டியிலேயே இந்த அணி வென்றது.

கால் இறுதி ஆட்டங்கள்

இதற்கு முன்னதாக அன்று காலை நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணியைச் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி தோற்கடித்தது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அணியை யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி தோல்வியடையச் செய்தது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணியிடம் தோல்வியடைந்தது.

அரை இறுதி ஆட்டங்கள்

ஞாயிறன்று நண்பகல் நடைபெற்ற அரை இறுதிப் போட்டிகளில் — சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணியை உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோற்கடித்தது.

தமிழக மேலவையை கலைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

சென்னை, மே 14

65 ஆண்டுகள் பழைமை வாய்ந்த தமிழக மேலவையைக் கலைப்பது என்று சட்டசபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்துக்கு ஆதரவாக 136 வாக்குகளும் எதிராக 25 வாக்குகளும் கிடைத்தன.

அ. தி. மு. க, மார்க்ஸியக் கம்யூனிஸ்ட் கட்சி, பார்வேட் புளொக், குடியரசுக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தி. மு. க, ஜனதா, இந்தியக் கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் ஆகியவற்றின் உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

இந்தியக் காங்கிரஸ், காந்தி காமராஜ் காங்கிரஸ், எம். எல். ஏக்கள் வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை.

தீர்மானம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதால் சட்டமாகும் என்று சபாநாயகர் பி. எச். பாண்டியன் அறிவித்தார்.

இத்தீர்மானம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது. அது வரை மேலவை நிர்வாகம் நிறுத்தி வைக்கப்படும்.

மற்றொரு செய்தி 8ஆம் பக்கத்தில்.

எழுத்தாளர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி நாளை

யாழ்ப்பாணம், மே 15

எழுத்தாளர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்றை யாழ் மாவட்ட இலக்கியக் குழு ஒழுங்கு செய்துள்ளது.

1986 87 ஆம் ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய இலக்கிய வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நாளை 16. 5 1686 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் இந்த ஒன்றுகூடல் இடம்பெறும்.

இலக்கியத்துறையைச் சார்ந்தோர் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இலக்கியக்குழு செயலாளர் திரு பி. நடராசன் தெரிவித்தார்.

இலக்கியக் குழுவின் மூத்த உறுப்பினர் திரு சி. சரவணபவன் (சிற்பி) இக்கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

சுற்றிவளைப்பு . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

யப்படுகிறது.

சுற்றிவளைப்பு, தேடுதல் ஆகியன தவிர்க்க முடியாதவை. தகவல்கள் கிடைத்தால்தான் நாம் அவற்றைச் செய்கிறோம்.

அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் பொதுமக்கள் பிரசன்னமாக இருக்க நேர்ந்தால் படையினரைக் கண்டதும் ஓடக்கூடாது. ஓடினால் அவர்களும் தீவிரவாதிகள் என்று படையினர் சந்தேகம் கொண்டு அவர்களைச் சுடவும், கைது செய்யவும் ஏதுவாகும்.

எனவே படையினரைக் கண்டால், ஓட வேண்டாம் என்று பொதுமக்களுக்கு வலியுறுத்த வேண்டும்.

அதே போலத் தீவிரவாதிகளுக்குப் புகலிடம் கொடுக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்த வேண்டும். அந்த இரண்டினையும் செய்வதால் பொதுமக்கள் வீண் கஷ்டங்களை அனுபவிப்பதைத் தவிர்க்கலாம் — இவ்வாறு இணைப்பதிகாரி தெரிவித்தாராம்.

இலங்கை.. ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடைவெளியை நிரப்பக் கூடியதான இலங்கையின் விளக்கங்கள், வியாக்கியானங்கள் முதலியவற்றை எல்லாம் இந்திய நிபுணர் குழு ஆராய்ந்த பின்னர்தான் இந்தியா தனது கருத்தை இலங்கைத் தூதரிடம் தெரிவித்தது.

இலங்கை அரசுக்கு இந்தியாவின் கருத்தை அறிவிக்கும்படி வெளிநாட்டமைச்சு, இலங்கைத் தூதரைக் கேட்டுக்கொண்டது.

சகலருடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது

ஓராண்டு நினைவு

ஆழ்கடலில் அமுதினிப் படகினில் இனப்படுகொலை செய்யப்பட்ட அமரர்

திருமதி வேலுப்பிள்ளை புஸ்பராணி

(இளைப்பாறிய ஆசிரியை)

அன்னையின் மடியில் ஆக்கம் 31 - 8 - 1924
அரசின் பிடியில் அழிவு 15 - 5 - 1985

திதி: அமரபக்க வைகாசிமாத ஏகாதசி
2 - 6 - 1986

அம்மாவெம் வெளிக்கிளக்கே உள்ளத்துள்ளே—எம்
ஆதரவு தரும் சுடரை அணைந்து விட்டார்
அம்மாவே நடவுமந்தகம் ஒரு [illegible]
சோகமதாய் இருள் நடுவே கலங்கவைத்தார்
எம்மைவே நாமிருக்க நியாயமேது இனவாதப் பேரரசால்
தர்மா நீ பிசிந்த துன்பம் நீங்கா
தர்மா நீ புகழுடம்பு பெற்றுவிட்டாய்
ஆதரிப்பார் நாரிவிலண்டானி மீதே!

அம்மா உன்பிரிவால்
கணவன், பிள்ளைகள், சகோதரர்கள்

நெடுந்தீவு மேற்கு
நெடுந்தீவு-4.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
வெளியீட்டு திகதி: 15 - 05 - 1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15, Second Lane, Power House Road, Jaffna
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka, under number QJ 60 N 84